**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 44/2020**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 04.11.2025 | | |
| பெயர்: | பார்த்தசாரதி (PW– 1 Cross con ) | தகப்பனார் பெயர்: | கோவிந்தசாமி |
| கிராமம்: | புதுப்பட்டினம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 60/2025 |

**<u>1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி: 04.11.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.11)**

1. இளங்கோவனும், மதியழகனும் வீடு கட்டியிருக்கின்ற சொத்து எனக்கு சொந்தமானது அல்ல என்றால் சரியல்ல, எனக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்துள்ளார்கள். இளங்கோவனும், மதியழகனும் வீடு கட்டியிருக்கின்ற சொத்து நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சொத்து என்றால் நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான இடத்தின் மீதும் சேர்த்து கட்டியுள்ளார்கள். இளங்கோவனும், மதியழகனும் நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சொத்தில் சுமார் 60 வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் இல்லை, சுமார் 5 வருடங்களாக தான் உள்ளார்கள். அதற்கு முன்பு குடிசை போட்டிருந்தார்கள்.

2. இளங்கோவனும், மதியழகனும் நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சொத்தில் நீண்ட காலமாக குடியிருந்து வருவதால் தான் அவர்களுக்கு அரசு தரப்பில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சொத்தில் நீண்ட காலமாக குடியிருந்து

வருவதால் தான் அவர்களுக்கு அரசு தரப்பில் கழிவறை கட்டுவதற்கு மானியம் கொடுத்து அந்த இடத்தில் கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

3. இளங்கோவனும் மதியழகனும் நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சொத்தில் ஆக்கிரமிப்பு செய்தது பற்றி நெடுஞ்சாலைத்துறைக்கு நான் புகார் அனுப்பியுள்ளேனா என்றால் அனுப்பியுள்ளேன். அந்த புகாரை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன். நான் புகார் கொடுக்காமல் வழக்கிற்காக பொய்யாக புகார் கொடுத்து, புகாரை தாக்கல் செய்துள்ளேன் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. நெடுஞ்சாலைத்துறையில் ஆக்கிரமிப்பு செய்தது சம்மந்தமாக துறை ரீதியாக விசாரணை நடைபெற்ற பிறகுதான் நடவடிக்கை எடுக்க இயலும் என்றாலும் நான் தனியாக நடவடிக்கை எடுக்க இயலாது என்றாலும் சரியல்ல .

4. நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சொத்து பற்றி நான் வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் C அட்டவணை சொத்தை நெடுஞ்சாலைத்துறைக்கு தேவை என்றால் அவர்களே எடுத்து கொள்வார்கள், அவர்களுக்கு தேவையில்லாததால்தான் தற்போதுவரை அது சம்மந்தமாக நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளிள் மின் இணைப்பை துண்டிக்க வேண்டும் என்று நான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான்

5. 1,2 பிரதிவாதிகள் மின்சார வாரியத்தை பொறுத்து சட்ட ரீதியான நுகர்வோர்கள், அதனால் மின் இணைப்பை துண்டிக்க இயலாது என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளிள் மின் இணைப்பை துண்டிக்க வேண்டும் என்ற பரிகாரம் இந்நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வராது என்றால் சரியல்ல. சட்ட ரீதியான நுகர்வோர்களின் மின் இணைப்பை துண்டிக்க நான் பரிகாரம் கேட்ட எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

6. 1,2 பிரதிவாதிகளிள் மின் இணைப்பை துண்டிக்க வேண்டும் என்று நான் மின்சார வாரியத்திடம் புகார் கொடுத்துள்ளேனா என்றால் புகார் கொடுத்துள்ளேன். நான் மின்சார வாரியத்திடம் புகார் கொடுக்காமல் புகார்

கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சொத்திற்கு சென்று வர தனியாக பாதை உள்ளது என்றால் சரியல்ல.

7. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்திற்கு சென்று பார்வையிட்ட பிறகு எனது சொத்திற்கு செல்ல தனியாக பாதை உள்ளது என்று அறிக்கை, வரைபடம் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1,2 பிரதிவாதிகள் மீது விரோதம் கொண்டு அவர்களை அகற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்பதால் நான் கேட்கக்கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.26)**